# அரசறிவியல்

## பன்மைத்துவ அணுகுமுறை



© www.e-thaksalawa.moe.gov.lk

தரம் : 12

அலகு : 01

தேர்ச்சி : 01

அரசியல் மற்றும் அரசறிவியலின் இயல்பு தொடர்பில் அறிவூட்டமுள்ள பிரஜையாக செயற்படுவர்.

தேர்ச்சிமட்டம்: 1.4

பாடத்துறையோடு தொடர்புடைய பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அரசறிவியலை கற்பார்.

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சுமி ஜனேந்திரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/சுண்டிக்குளிமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.ரா.சுகுமார் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/ஏழாலை மகாவித்தியாலயம்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 1.4.3 பன்மைத்துவ அணுகுமுறை

கிரேக்ககாலத்தில் இருந்து தற்காலம் வரையான அரசறிவியல் ஆய்வுகளில் பல்வேறு துறைகளைப் பயன்படுத்தி பலதரப்பட்ட எண்ணக்கருக்களையும் விதிமுறைகளையும் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டமையால் அது பன்மைத்துவ அணுகுமுறை என அறிமுகமாகியது.

அரசறிவியலின் வரலாற்றிலே ஏனைய பாடத்துறைகளுடன் ஆய்வுகளை மேற்கொண்டு அரசறிவியலானது போசிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது.

இவ்வளர்ச்சி நிலையை நோக்கும் போது

- கிரேக்கயுகத்தில் - தத்துவவியலும்
- உரோமயுகத்தில் - இறையியில் சாஸ்திரம், வரலாறு மற்றும் சட்டவியல் என்பனவும்
- 19ம் நூற்றாண்டில் - அரசியல் பொருளாதாரம், வரலாறு சட்டவியல் என்பனவும்
- 20ம் நூற்றாண்டில் - சமூகவியல் மானுடவியல், உளவியல், புவியியல், கலை கலாசாரம் என்பனவும் ஆய்வு செய்யப்பட்டது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசறிவியலுக்கு பன்மைத்துவ அணுகுமுறை தேவைப்படுவதற்கான காரணங்கள்

- அரசியல் என்பது சமூகத்திலிருந்து ஏனைய அம்சங்களில் தனிமைப்பட்டு இருப்பதனாலும்.
- அரசியல் சமூகத்துடன் இணைந்தும் இருப்பதனாலும்.
- அரசியல் சமூகத்தினால் மேலெழுந்துள்ள தோற்றப்பாடொன்றாக இருப்பதனாலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

**உதாரணமாக**

- ஜனநாயகம் பற்றிய ஆய்விலும்
- ஜனநாயத்தினை சாதி முறைகளுக்கிடையிலான கொண்ட தொடர்புகள் ஆய்வுசெய்வதற்கும்
- மதரீதியான முறைமைக்குள் தொடர்புபடுத்தி ஆய்வுசெய்வனாலும் தென்னாசிய அரசியல் கலாச்சாரத்தில் இவை முக்கியம் பெறுவதனாலும் அரசியல் ஆய்வில் முக்கிய கருத்தியலாக பேசப்படுகின்றது.
- முரண்பட்ட அரசியல் கலாசாரநிலை ஒன்றை தோற்றுவிப்பதற்கு சாதி, மதம் இனம் போன்றன மூலகாரணங்களாக இருப்பதனாலும்
- மொழிசார் சமூகப்பிரச்சினைகள் வரலாற்று ரீதியான அழுத்தங்ளை ஜனநாயகத்தில் ஏற்படுத்தி இருப்பதனாலும் பன்மைத்துவ அணுகுமுறைக்கு சமூகவியல் மற்றும் மானுடவியல் அணுகுமுறைகள் அரசறிவியல் ஆய்வுக்கு அவசியமாகும்.
- மேலும் அரசியல் யாப்புகளில் மதம்மொழி போன்ற சமூகவியல் விடயங்களுக்கு ஜனநாயக அந்தஸ்துடன் சட்டவலிமை கொடுக்கப்பட்டிருப்பதால் பன்மைத்துவ ஆய்வு அரசறிவியலை போசிக்கின்றது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பன்மைவாத எண்ணக்கருவின் பிரிவுகள்

குறிப்பிட்ட பாடத்துறையாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் சமூகத்தின் ஏனைய பிரிவுகளுடன் அரசியலானது கூடிக்குறைந்த அளவில் தொடர்புபட்டுக்கொண்டிருக்கின்றது.

அரசறிவியல் தனக்கே உரித்தான கோட்பாடு மற்றும் எண்ணக்கருக்களை கொண்டிருப்பதாலும் ஏனைய பாடப்பரப்புக்களின் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களோடு இது தங்கியிருப்பது மற்றும் அதன் மூலம் போசிக்கப்படும் அம்சமாகவும் காணப்படுகின்றது.

கோட்பாடு மற்றும் எண்ணக்கருக்களுக்கு மேலாக விதிமுறைகள் தொடர்பிலும் அரசறிவியலில் ஏனைய பாடத்துறைகளின் விதிமுறைகளோடு தொடர்புபடலும் அதன் மூலம் ஊட்டம் பெறுவதும் பன்மைவாத அணுகுமுறையை வலுப்படுத்தி அரசறிவியலில் முக்கியதத்துவம் பெறுகின்றது.


## பன்மை வாதத்தின் நன்மைகள்

- சமூகத்தின் வளர்ச்சி கட்டங்களில் காணப்பட்ட அந்தந்த கருத்தியல்கள், சித்தாந்தங்கள் வாதங்களில் அரசியல் இணைந்து பயணிப்பதனால் அரசறிவியலில் இவ்வாதம் முக்கியத்துவம் பெறுகின்றது.
- பன்மைவாத ஆய்வுநுட்பங்களை தழுவுவதால் அரசறிவியல் ஆய்வுகள் முழுமை பெறுகின்றது.
- சமூக கலாசார பண்புகள் அரசியல் கலாசார பொறிமுறைத்தளங்களுக்கு தாங்குதிறனைக் கொடுப்பதால் நவீன அபிவிருத்தி அரசியல் பாங்கிற்கு இட்டுச்செல்கின்றது.
- பன்மைத்துவ ஆய்வுகளால் அரசறிவியல் காலத்துடன் சேர்ந்து பயணிக்கும் நவதன்மைமையை பெறுகின்றது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பன்மைவாதத்தின் தீமைகள்

- பன்மைவாத அணுகுமுறையில் அரசறிவியலுக்கு மிகஅவசியமில்லாத சமூகம்சார் அரசியல் விடயங்கள் காரணமாக அரசறிவியலின் தனித்துவத்தை செயலிழக்கச்செய்துள்ளது.
- சமகால அரசியல் சமூகத்தில் காணப்படும் குழப்பங்களும் அரசியல் எண்ணக்கருக்களாக வளர்ச்சியடைய முற்படுத்தல்.
- சமூகவியலில் இருந்து அரசறிவியல் பிரிந்து சென்று தனித்துவமாக காணப்பட்டது. ஆனால் இவ்வாய்வு முறைமையால் மீண்டும் அது தனது தனித்துவத்தை இழந்துவிடக்காரணமாகின்றது.
- அரசறிவியலின் யாப்பு போன்ற அம்சங்களில் மொழி, மதவிடயங்கள் பொறிமுறைகளை செயலிழக்கச்செய்யும்.




அரசறிவியலில் பன்மைவாத அணுகு முறையின் முக்கியத்துவத்தை விளக்குக.

Copyright www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk